## கடலூர் மாவட்டத்தில் வடகிழக்கு

# பருவமழையை எதிர் கொள்ள அரசு தயாராக உள்ளது!

## அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் பேட்டி!



கடலூர், நவ.30-

கடலூர் மாவட்டம் வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ள அரசு நிர்வாகம் தயார்நிலையில் உள்ளது என வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் அவர்கள் செய்தியாளர்கள் சந்திப்பின் போது தெரிவித்தார்.

வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் மேலாண்மை இயக்குநர் (சர்க்கரைத் துறை) அன்பழகன் மாவட்ட ஆட்சித்தலைவர் . சிபி ஆதித்யா செந்தில்குமார், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரிராஜா ஆகியோர் முன்னிலையில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்புப் பணிகள் குறித்து கடலூர் சுற்றுலா மாளிகையில் செய்தியாளர் சந்திப்பு நேற்று (29.11.2025) நடைபெற்றது

வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்ததாவது,

முதலமைச்சர் அவர்கள் வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் அரசு உயர்அலுவலர்களுக்கு அனைத்து விதமான முன்னேற்பாடு பணிகள் மற்றும் பொதுமக்களை பாதுகாப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளார்கள். அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைத்து நிலை உள்ளாட்சி பிரதிநிதிகளையும் களத்திலிருந்து தேவையான அனைத்து முன்னேற்பாடு பணிகளையும் மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார்கள்.

முதலமைச்சர் அவர்கள் பருவமழை தொடங்குவதற்கு முன்பாகவே தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தியன்பேரில் கடலூர் மாவட்டத்தில் 22 இடங்கள் மிக அதிகமாக பாதிப்புக்குள்ளாக கூடிய இடங்களாகவும், 39 இடங்கள் அதிகம் பாதிப்புக்குள்ளாக கூடிய இடங்களாகவும், 20 இடங்கள் மிதமாக பாதிப்புக்குள்ளாக கூடிய இடங்களாகவும், 158 இடங்கள் குறைவான அளவு பாதிப்பு ஏற்படக்கூடிய இடங்களாகவும் என 239 இடங்கள் கண்டறியப்பட்டு, அனைத்து முன்னேற்பாடு பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### அடிப்படை வசதிகள் தயார் நிலை!

கனமழை ஏற்படும்பொழுது பொதுமக்களை பாதுகாப்பாக 28 புயல் பாதுகாப்பு மையங்களில் 8400 நபர்களும், 14 பல்நோக்கு பாதுகாப்பு மையங்களில் 15,800 நபர்களும், 191 தற்காலிக தங்கும் இடங்களில் 1,54,875 நபர்களும் தங்க வைக்கும் அளவிற்கு அனைத்து அடிப்படை வசதிகளுடன் தயார் நிலையில் உள்ளது.

பேரிடர் ஏற்படும் பொழுது அப்பகுதிகளில் போக்குவரத்து வசதிகளை சரிசெய்திடவும், மீட்புப் பணிகள் மேற்கொள்ளவும் JCB, பொக்கலைன் இயந்திரங்கள், மரம் அறுக்கும் இயந்திரங்கள் மற்றும் தற்காலிக மின்சார தேவைக்காக ஜெனரேட்டர்கள் தயார் நிலையில் உள்ளன. மேலும் மணல் மூட்டைகளும், சவுக்கு கட்டைகளும், ரப்பர் படகுகளும், 8,300 மின் கம்பங்களும், 164 கி.மீ மின் கடத்திகளும், 128 மின்மாற்றிகளும் தயார் நிலையில் உள்ளன. மீட்புப் பணிகளில் ஈடுபட தேசிய பேரிடர் மீட்புக்குழுவினர் 35 நபர்கள், தமிழ்நாடு பேரிடர் மீட்புக்குழுவினர் 45 நபர்கள் மற்றும் மாநில பேரிடர் மீட்புக்குழுவினர் 60 நபர்களும் வருகைபுரிந்துள்ளனர்.

அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் மின்சாரம் தடையின்றி வழங்கும் வகையில் ஜெனரேட்டர் வசதிகள், 24 மணிநேரமும் சிகிச்சை அளிக்கக்கூடிய வகையில் மருத்துவர்கள் சுழற்சி முறையில் ஈடுபட உள்ளனர். போதிய மருந்து வசதிகளும் இருப்பு உள்ளது. குறிப்பாக அடுத்த ஒரு வாரகாலத்தில் பிரசவம் மேற்கொள்ள 925 கர்ப்பிணிகள் உள்ளனர். அவர்களுக்கு மழையின் போது மகப்பேறு சிகிச்சை மேற்கொள்வதற்கான வசதிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மழைநீர் வடிய ஏதுவாக நீர்வளத்துறை மூலம் சிறிய மற்றும் பெரிய நீர் ஆதார அமைப்புகள் தூர்வாரப் பட்டுள்ளது. மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டு அவர்களையும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மழைநீரினால் சூழப்பட்ட விளைநிலங்களில் உள்ள தண்ணீரினை உடனுக்குடன் அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### விவசாயிகளுக்கு காப்பீடு!

விவசாயிகள் அனைவரும் தங்கள் நிலங்களுக்கு காப்பீடு செய்ய 15.11.2025 வரை அனுமதிக்கப்பட்டிருந்தது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில் தற்போது காப்பீடு செய்ய 01.12.2025 வரை காலநீடிப்பு செய்யப்பட்டுள்ளது. மாநில அளவில் கடந்த ஆண்டு சம்பா பருவத்திற்கு சுமார் 18.05 இலட்சம் ஏக்கர் பரப்பில் 8,06,494 விவசாயிகள் தங்கள் விளைநிலங்களுக்கு காப்பீடு செய்துள்ளனர். இந்த ஆண்டு இதுவரை சுமார் 20.69 இலட்சம் ஏக்கர் பரப்பிலான விளைநிலங்களுக்கு 8,61,629 விவசாயிகள் காப்பீடு செய்துள்ளனர். கடந்த ஆண்டை விட இந்தாண்டு கூடுதல் நிலங்களுக்கு காப்பீடு செய்யப்பட்டுள்ளது. குத்தகைதாரர் விவசாயிகளும் காப்பீடு செய்யலாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளது.

யூரியா, பொட்டாஷ், டிஏபி, காம்ப்ளக்ஸ் உள்ளிட்ட உரங்கள் தேவையான அளவு கையிருப்பு உள்ளது. கலப்பட உரம் விற்பவர்கள் கண்டறியப் பட்டு சட்டரீதியாக வழக்குப்பதியப்பட்டு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுவருகிறது. கடலூர் மாவட்டம் பெண்ணையாறு, கெடிலம். வெள்ளாறு, பரவனாறு, கொள்ளிடம் ஆகிய 5 பெரிய ஆறுகள் கடலில் கலக்கும் வடிகால் பகுதியாக உள்ளதால் மாவட்டத்தில் தாழ்வானப் பகுதிகளில் பாதிப்புகள் ஏற்படாவண்ணம் படிப்படியாக பல்வேறு நிரந்தர கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குறிப்பாக ரூ.81.12 கோடி மதிப்பீட்டில் அருவாள்மூக்கு ஒழுங்கியம் கட்டுதல் மற்றும் வெள்ளநீர் வடிகால் கால்வாய் அமைக்கும் பணி போன்ற பல்வேறு பணிகள் நடைபெற்று வருகிறது. கனமழை ஏற்படும் பொழுது பரவனாற்றில் என்.எல்.சி மூலம் வெளியேற்றப்படும் சுரங்கநீரின் அளவை மாவட்ட நிருவாகத்திடம் உரிய அனுமதி பெற்று வெளியேற்றிட அறிவுறுத்தப்பட்டுள்ளது என வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.ஜெயக்குமார் மாவட்ட வருவாய் அலுவலர் கோ.புண்ணியகோட்டி, கடலூர் வருவாய் கோட்டாட்சியர் சுந்தரராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளையொட்டி, திருப்பத்தூர் உதவும் உள்ளங்கள் மனநலம் பாதிக்கப்பட்டோர் மறுவாழ்வு இல்லத்தில் மதிய உணவு வழங்கும் நிகழ்வு நகரச் செயலாளர் எஸ். இராஜேந்திரன் தலைமையில், அ. நல்லதம்பி எம்.எல்.ஏ. முன்னிலையில், டி.எஸ்.மாதேஸ்வரன், அரவிந்த் ஏற்பாட்டில் நடைபெற்றது. மே. சார்லஸ், நவீன் குமார், ஆர். அரவிந்த், பிரேம்குமார், சாந்தகுமார், ராஜ்குமார், தீனா, சங்கர், மு. ஞானசேகரன், ச.வீரா, டி.ஜி. ஐயப்பன், பெருமாள் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றரனர்.

## தமிழ் இணையக் கல்விக்கழகம் சார்பில்

# தியாகராஜர் பொறியியல் கல்லூரியில் கணித்தமிழ் சொற்பொழிவு நிகழ்ச்சி!



சென்னை, நவ.30-

தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2024-25 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின் போது கணித்தமிழ் சார்ந்து தொடர் சொற்பொழிவுகள் மாதந்தோறும் நடத்தப்படும் என அறிவித்தார்.

இதனைச் செயல்படுத்தும் விதமாக தமிழ் இணையக் கல்விக்கழகம் மாதந்தோறும் துறைசார்ந்த அறிஞர்கள் மற்றும் வல்லுநர்களைக் கொண்டு கணித்தமிழ் தொடர்பான சொற்பொழிவுகளைக் கல்லூரிகளில் நடத்தி, அதனை அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் பயனடையும்வண்ணம் வலையொளிதளம் (YouTube) வழியே நேரலையில் ஒளிபரப்பு செய்துவருகிறது. முதல் கணித்தமிழ் தொடர் சொற்பொழிவு நிகழ்ச்சி தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் 17.12.2024 அன்று எத்திராஜ் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் முனைவர் மதன் கார்க்கி செயற்கை நுண்ணறிவும் கலைகளும் என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றினார்.

தமிழ் இணையக் கல்விக் கழகம், தியாகராஜர் பொறியியல் கல்லூரியுடன் இணைந்து நடத்தும் ஏழாவது கணித்தமிழ் தொடர் சொற்பொழிவு நிகழ்ச்சி மற்றும் கணித்தமிழ்ப் பேரவை தொடக்கவிழா நேற்று முன்தினம் (28.11.2025) மதுரை, தியாகராஜர் பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் தொடங்கி வைத்துத் தலைமையுரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் நீச்சல்காரன் என்கிற இராஜாராமன் (மொழித் தொழில்நுட்ப வல்லுநர்) "தமிழ்ப் பெருமொழி மாதிரிகள் வாய்ப்புகளும் சவால்களும்" என்னும் தலைப்பில் உரையாற்றினார், தமிழ் இணையக் கல்விக்கழக இயக்குநர் திரு. ரெ. கோமகன் அவர்கள் நிகழ்ச்சியின் நோக்கவுரை வழங்கினார். தியகராஜர் பொறியியல் கல்லூரி முதல்வர் முனைவர் அசோக்குமார் வரவேற்புரையும் புலத்தலைவர் முனைவர் பாலாஜி நன்றியுரையும் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் தியாகராஜர் பொறியியல் கல்லூரியின் கணினி அறிவியல், மின்னணுவியல் உள்ளிட்ட பல்துறை மாணவர்கள் கலந்துகொண்டனர்.

## தமிழ்ச் சமுதாயத்தின் பெருமைமிகு வரலாற்றினை

# ஆய்வு மேற்கொள்ள விண்ணப்பிக்கும் தேதி நீட்டிப்பு!

## அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தகவல்!

சென்னை, நவ.30-

தமிழ்ச் சமூகத்தின் பெருமைமிகு வரலாற்றினை அனைவரும் அறிந்து கொள்ள தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தின் அரிய வரலாற்று ஆவணங்களை ஆராய்ந்து ஆய்வு மேற்கொள்ள ஆராய்ச்சியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்படுவதற்கான தேதி 05.12.2025 வரை நீட்டிக்கப்படுவதாக உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்துள்ளதாவது:

1973-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சி மன்றம் மாறிவரும் காலத்திற்கேற்ப மீளுருவாக்கம் செய்யப்படும் என்றும், ஆண்டுதோறும் 10 முதல் 15 ஆய்வுகள் வரை மேற்கொள்ளப்படும் என்ற முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்கத் தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சி மன்றம் மீளுருவாக்கம் செய்யப்பட்டது. அதன் கீழ் வரலாற்று ஆய்வுகள் மேற்கொள்ள 20 நபர்களுக்கு ஆராய்ச்சி உதவித்தொகை வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டன.

தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தின் அரிய ஆவணங்களை ஆராய்ந்து தமிழ்நாட்டின் பெருமைமிகு வரலாற்றினை வெளிகொண்டு வரும் வகையிலான ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கு முதுகலைப் பட்டதாரிகள் அல்லது தனிநபர் ஆராய்ச்சியாளர்கள் WWW.TAMILNADUARCHIVES.TN.GOV.IN என்கிற இணையதளத்தில் விண்ணப்பங்கள் இணைய வழியில் விண்ணப்பிக்க 17.11.2025 முதல் 28.11.2025 வரை தெரிவிக்கப்ட்டிருந்தது.

ஆய்வு மேற்கொள்வதற்காக விண்ணப்பித்த ஆராய்ச்சியாளர்களின் விண்ணப்பப் படிவத்தினை முழுமையாகப் பூர்த்தி செய்து தேவையான ஆவணங்களை இணைய வழியில் பதிவேற்றம் செய்வதற்கான கால அவகாசம் 05.12.2025 வரை நீட்டிக்கப்படுகிறது.

தகுதியுள்ள ஆராய்ச்சியாளர்கள் தங்களது விண்ணப்பங்களை இணையவழியில் மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் 05.12.2025 வரைவிண்ணப்பித்துப் பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கிறேன். விண்ணப்பங்கள் இணையவழியில் மட்டுமே பெறப்படும்.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

# முன்னாள் மகளிர் அணிச் செயலாளர் இராஜம் ஜான் மறைவு!

## கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அஞ்சலி!

நெல்லை, நவ.30-

நெல்லை மேற்கு மாவட்டம் அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதி விக்கிரமசிங்கபுரத்தில் வசித்து வந்த கழக மகளிர் அணி முன்னாள் செயலாளர் இராஜம் ஜான் (வயது 69) அவர்கள் உடல் நலக் குறைவு காரணமாக 2411.2025-திங்கட்கிழமை அன்று இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இது பற்றிய தகவல் அறிந்ததும் கழக துணைப் பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள்,சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன், நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன்,நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ.நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் ஆகியோர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.பின்னர் மறைந்த ராஜம் ஜான் அவர்களின் குடும்பத்தினருக்கு கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் ஆறுதல் கூறினார்கள்.

நெல்லை மேற்கு மாவட்டம் அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதி விக்ரமசிங்கபுரத்தில் வசித்து வந்த மறைந்த ஜான் அவர்களின் மனைவியும் கழக மாநில மகளிர் அணி முன்னாள் செயலாளருமான இராஜம் ஜான் அவர்கள்

உடல் நலக்குறைவு காரணமாக அன்னாரது இல்லத்தில் 24.11.2025 அன்று இயற்கை எய்தினார். இராஜம் ஜான் அவர்கள் கழக மகளிர் அணி செயலாளராக பணியாற்றியபோது நெல்லை மாவட்டம் விக்கிரமசிங்கபுரம் பகுதியில் பல இடங்களில் மகளிர் அமைப்புகளை நிறுவி மகளிர் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் துணிவோடு போராடியதோடு, கழகப் பணியிலும் தீவிரமாக ஈடுபட்டு வந்தவர்.கழகம் நடத்திய பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு பல முறை சிறை சென்றவர். இந்தி திணிப்பு எதிர்ப்புப் போராட்டம்,விலைவாசி உயர்வு போராட்டம்,இரயில் மறியல் போராட்டத்திலும் கலந்து கொண்டவர்.

தொடர்ந்து தற்போது வரை கழகம் அறிவித்த மாவட்ட அளவிலான ஆர்ப்பாட்டங்கள்,கழக சாதனை விளக்க பொதுக் கூட்டங்களில் கலந்து கொண்டு சிறப்பித்தவராவார்.இப்படி கழகத்திற்காக அயராது உழைத்து வந்த கழக மகளிர் அணி முன்னாள் செயலாளர் இ.ராஜம் ஜான் அவர்கள் விக்கிரமசிங்க புரத்தில் உள்ள அன்னாரது இல்லத்தில் இயற்கை எய்தினார்.

நிகழ்வில் முன்னாள் அமைச்சர் பூங்கோதை ஆலடி அருணா,கழக மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், குழந்தைகள் நல ஆணைய தலைவர் புதுக்கோட்டை விஜயா, முன்னாள் எம்பி ஞானதிரவியம், மாநில தொண்டரணி துணை செயலாளர் ஆவின் ஆறுமுகம், மாநில விவசாய தொழிலாளரணி துணை செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன்,நெல்லை துணை மேயர் ராஜு, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மல்லிகா அருள்,ஒன்றிய செயலாளர்கள் பரணி சேகர், முத்துப்பாண்டி என்ற பிரபு,எரிக்ஜுடு, விக்கிரமசிங்கபுரம் நகர செயலாளர் கணேசன்,ஆலங்குளம் ஒன்றிய குழு தலைவர் திவ்யா மணிகண்டன், உள்பட கழகத்தினர், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், பொதுமக்கள்அஞ்சலி செலுத்தினர்.

மறைந்த ராஜம் ஜான் அவர்களுக்கு வினு என்ற ஆரோக்கியராஜ் என்ற மகனும்,பிந்து என்ற மகளும் உள்ளனர்.

அன்னாரது இறுதிச் சடங்கு நேற்று (25ஆம் தேதி) நடைபெற்றது.பின்னர் திரு இருதயகுளம் கல்லரை தோட்டத்தில் அன்னாரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சரின் 'நான் முதல்வன்' திட்டத்தில் சிவில் சர்வீஸ் தேர்வுக்குப் படிக்கும் மாணவி அம்சாவிற்கு விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. லேப்டாப் வழங்கி வாழ்த்து தெரிவித்தார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் உள்ளனர்.



விளாத்திகுளம் வட்டம் பூசனூர் கிராமத்தில் பசும்பொன் உ.முத்துராமலிங்கத் தேவர் திருமகனாரின் 118வது ஜெயந்தி விழாவை முன்னிட்டு, நடைபெற்ற மாபெரும் மாட்டு வண்டி எல்கை பந்தயத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ.வி.மார்க்கண்டேயன் கொடியசைத்து துவக்கி வைத்தார்.நிகழ்வில் விளாத்திகுளம் ஒன்றிய செயலாளர் இமானுவேல், ஒன்றிய பொருளாளர் முனியசாமி, வடக்கு மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் பெப்சி முனியசாமி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் முத்துராமலிங்கம், கிளைச் செயலாளர்கள் பரமசிவப் பாண்டியன், முனியசாமி, கருப்பசாமி, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## நெய்வேலி தொகுதியில் இளைஞர் எழுச்சி நாள் விழா:

# 3,000 பேருக்கு சேலை, அசைவ உணவு, நலத்திட்ட உதவிகள்!

## சபா. இராஜேந்திரன் எம்.எல்.ஏ, வழங்கினார்!

கடலூர்,நவ.30-

தமிழ்நாடு துணை முதல்வரும், திமுக இளைஞரணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா,

நெய்வேலி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட நெய்வேலி நகரம், வட்டம் 21, மற்றும் குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றியம், நெய்வேலி ஆர்ச் கேட் பகுதிகளில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

நிகழ்ச்சிக்கு நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராஜேந்திரன் தலைமை தாங்கினார். இந்நிகழ்ச்சியில் பொதுமக்கள், கழகத்தினர் என 3,000ம் பெண்களுக்கு சேலை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளும், பொதுமக்களுக்கு சுவையான அசைவ உணவும் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் நெய்வேலி தொகுதி பார்வையாளர் பா. துரைசாமி, கடலூர் மேற்கு மாவட்டப் பொருளாளர் தண்டபாணி, முன்னாள் ஒன்றியத் தலைவர் சபா.பாலமுருகன், நெய்வேலி நகர செயலாளர், தொமுச செயலாளர் குருநாதன் ,குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றிய செயலாளர் குணசேகரன், பண்ருட்டி வடக்கு ஒன்றிய செயலாளர் சந்தோஷ்குமார், அவைத்தலைவர்கள் நன்மாறன் பாண்டியன், வீர.ராமச்சந்திரன், ஒன்றியப் பொருளாளர் ஆனந்தஜோதி, துணைசெயலாளர் ஏழுமலை,நகரப் பொருளாளர் மதியழகன், மாவட்டப் பிரதிநிதிகள் ரவிச்சந்திரன், நாசர், என்எல்சி தொமுச தலைவர் ஞானஒளி, பொருளாளர் அப்துல் மஜீத், அலுவலகச் செயலாளர் சீனிவாசன், நகரத் துணைச் செயலாளர்கள் கருப்பன், செந்தமிழ்ச்செல்வன், செந்தில்குமார், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் ராஜேஷ், மாவட்ட இளைஞரணித் துணை அமைப்பாளர் ராஜேஷ் உள்ளிட்ட இளைஞரணி நிர்வாகிகள், தொ.மு.ச துணைத்தலை வர்கள்,பகுதி செயலாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள், சிபிஎஃப் இயக்குநர்கள், கிளை கழக செயலாளர்கள் கலந்து கொண்டனர்.




நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில் இளைஞர் எழுச்சி நாளை முன்னிட்டு, நெய்வேலி நகரம் வட்டம் 21ல், 3000 பெண்களுக்கு சேலைகள், அசைவ உணவு மற்றும் நெய்வேலி ஆர்ச் கேட் பகுதியில் பொதுமக்களுக்கு அசைவ உணவை சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. வழங்கினார். தொகுதி பொறுப்பாளர் பா.துரைசாமி, முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் சபா.பாலமுருகன்,ஒன்றிய செயலாளர்கள் அ.குணசேகரன் ஆர். சந்தோஷ்குமார், நகர செயலாளர்வி. குருநாதன், மாவட்ட பொருளாளர் ஜி .தண்டபாணி, உள்ளிட்ட கழக நிர்வாகிகள், தொ.மு.ச. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மாவட்ட அமைச்சர்கள் - பொறுப்பு அமைச்சர்கள் ஆங்காங்கு மாவட்டங்களில் நிலைமையை கண்காணித்து வருகிறார்கள்

# புயலை எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!



சென்னை, நவ.30-

**தமிழ்நாட்டில் புயலை எதிர்கொள்ள அரசு தயாராக இருக்கிறது என்றும், மாவட்ட அமைச்சர்களும், பொறுப்பு அமைச்சர்களும் ஆங்காங்கே நிலைமையை கண்காணித்து வருகிறார்கள் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டி அளித்துள்ளார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.11.2025) சென்னை, எழிலகத்திலுள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, டித்வா புயல் காரணமாக அதிகனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக ஆய்வு மேற்கொண்ட பின்பு, செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

29.11.2025 மற்றும் 30.11.2025 ஆகிய தேதிகளில் தெற்கு பகுதிகளிலும், டெல்டா பகுதிகளிலும் கடுமையான மழை பெய்யும் என்று எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள். ரெட் அலர்ட் கொடுத்திருக்கிறார்கள். ரெட் அலர்ட் விடுத்திருக்கும் மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக்காட்சி வாயிலாக தொடர்பு கொண்டு ஆய்வு மேற்கொண்டோம். ஏற்கெனவே, நேற்றையதினம் இதுகுறித்து என்னுடைய தலைமையில், தலைமைச் செயலாளர் முன்னிலையில் உயர் அதிகாரிகள் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கூட்டத்தை கூட்டி உரிய அறிவுரை வழங்கியிருக்கிறோம்.

எல்லா மாவட்டங்களுக்கும் கண்காணிப்பு அலுவலர்களை அனுப்பி வைத்திருக்கிறோம். அனைவரும் அவரவர்களுக்குரிய மாவட்டங்களுக்கு சென்றுவிட்டார்கள். ஏற்கெனவே, எந்தெந்த இடங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றதோ அந்தந்த இடங்களில் கவனமாக இருக்க வேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிறோம். மின் கம்பிகள் எங்கும் அறுந்து விழாமல் விபத்து ஏற்படாமல், கவனமாக கண்காணிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கின்றோம். எனவே, எச்சரிக்கை செய்யும் அந்த பணியைதான் இன்றைக்கு நாங்கள் மேற்கொண்டுள்ளோம்.

**செய்தியாளர்:** சென்னைக்கு ஏதேனும் பாதிப்புகள் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்களா? சென்னையில் எந்தமாதிரியான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றோம்? அது பற்றி...

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** சென்னையும் பாதிக்கப்படும். சென்னையிலும் அதிகம் மழை பெய்யும் என்று சொல்கிறார்கள்.

**செய்தியாளர்:** நேற்று பேசும்போது, ஏழைகள் அதிகளவில் பாதிக்கப்படக் கூடாது நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று பேசியிருந்தீர்கள். இதற்கான முகாம்கள், உணவுப்பொருட்கள் தயார் நிலை பற்றி...

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** தேவையான இடங்களில் முகாம்களும், அங்கு உணவுகள் வழங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது. தண்ணீர் திறந்துவிடும் நேரங்களில் தாழ்வான பகுதிகளில் உள்ள மக்களை உடனடியாக அப்புறப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது.

**செய்தியாளர்:** பொறுப்பு அமைச்சர்கள் - கண்காணிப்பு அமைச்சர்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனரா? அது பற்றி...

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** ஏற்கெனவே அந்தந்த மாவட்டங்களில் பொறுப்பு அமைச்சர்கள் இருக்கிறார்கள். அவர்களும் அதை கண்காணித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

**செய்தியாளர்:** டெல்டா மாவட்ட மக்களை தமிழக அரசு தொடர்ந்து வஞ்சித்து வருகிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் சொல்லி வருகிறார். அது பற்றி...

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** அவர் வஞ்சிக்காமல் இருந்தால் போதும். அதுதான் முக்கியம். அவர் சொல்லிக் கொண்டுதான் இருப்பார். அதுபோன்று எதுவும் கிடையாது. அவர் எப்போதும் அப்படிதான் சொல்லிக்கொண்டு இருப்பார். அதற்கெல்லாம் பதில் சொல்ல வேண்டிய அவசியம் கிடையாது.

**செய்தியாளர்:** புயலை எதிர்கொள்ள எல்லாவற்றிலும் தயாராக இருக்கிறதா? அது பற்றி...

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** தயாராக இருக்கிறோம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டி யளித்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.11.2025) சென்னை, எழிலகத்திலுள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, டித்வா புயல் காரணமாக அதிகனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து புதுக்கோட்டை, தூத்துக்குடி, திருநெல்வேலி, திருவள்ளூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், காஞ்சிபுரம் உள்ளிட்ட 14 மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக்காட்சி வாயிலாக ஆய்வு மேற்கொண்டார்.

வங்கக் கடலில் உருவான டித்வா புயல் தற்சமயம் இலங்கையின் மேல் நிலை கொண்டுள்ளது. இது தொடர்ந்து வடக்கு-வடமேற்கு திசையிலே நகர்ந்து தமிழ்நாட்டின் கடலோரமாக வடக்கு நோக்கி நகரக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனால் இன்று (30.11.2025) தமிழ்நாட்டில் கடுமையான மழைப் பொழிவு ஏற்படக் கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. எனவே மாநில பேரிடர் மீட்பு படையின் 16 அணிகளும், தேசிய பேரிடர் மீட்பு படையின் 12 அணிகளும் காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு, சென்னை, வேலூர், இராணிப்பேட்டை, திருவண்ணாமலை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேலும், பேரிடர் சூழலை திறம்பட கையாளுவதற்காக, கூடுதலான தேசிய பேரிடர் மீட்பு படையை அண்டை மாநிலங்களில் இருந்து கொண்டு வருமாறும், தேவை ஏற்படின் இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் இந்திய கடலோர காவல் படை ஆகிய மத்திய படைகளை தயார் நிலையில் இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், தொலைதொடர்பு நிறுவனங்களுடனும், எண்ணெய் நிறுவனங்களுடனும் ஆயத்த நிலை குறித்து ஆய்வு கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இதற்காக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 27.11.2025 அன்று தலைமைச் செயலகத்தில், வடகிழக்கு பருவமழை யினை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போது நிலவிவரும் வானிலை நிலவரம் குறித்தும், பேரிடர் மேலாண்மைக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள சிறப்பு முன்னெடுப்புகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

அதன் தொடர்ச்சியாக முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் சென்னை, எழிலகத்தில் உள்ள மாநில அவசர கால செயல்பாட்டு மையத்திற்கு வருகை புரிந்து 14 மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக டித்வா புயல் காரணமாக எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், முதலமைச்சர் அவர்கள், அனைத்து துறையினரும் முறையான ஒருங்கிணைப்புடன் செயல்பட வேண்டும் என்றும், அனைத்து துறை அலுவலர்களும் தயார் நிலையில் இருக்கவும், மக்கள் பாதிக்கப்படாத வகையில் பாதுகாப்பு மையங்களில் தங்க வைக்கவும் அறிவுறுத்தினார். மேலும், மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ள கண்காணிப்பு அலுவலர்களை சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் தொடர்ந்து முகாமிட்டு ஒருங்கிணைப்பு பணிகளை மேற்கொள்ளவும் அறிவுறுத்தினார்.

அத்துடன், முகாம்களில் மக்களுக்கு தேவையான பால் உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும் எனறும், குடியிருப்பு பகுதியில் வெள்ளநீரை அகற்றிட தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்றும், புயல் காற்றினால் மின்கம்பங் கள் பாதிக்கப்பட்டால், அதனை சீர்செய்திட உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் எம். சாய்குமார், எரிசக்தி துறை கூடுதல் தலைமைச் செயலாளர்மங்கத் ராம் சர்மா, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.பெ.அமுதா, நில நிர்வாக ஆணையர் டாக்டர். கே. எஸ். பழனிசாமி, பேரிடர் மேலாண்மை ஆணையர் திருமதி. சிஜி தாமஸ் வைத்தியன், பேரிடர் மேலாண்மை இயக்குநர் சி.முத்துக்குமரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# புயல்: மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

சென்னை, நவ.30-

டித்வா புயல் பாதிப்புகளில் இருந்து மக்களைக் காக்க மாவட்ட ஆட்சியர்களுடன் ஆலோசனை மேற்கொண்டது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**டித்வா புயல் பாதிப்புகளில் இருந்து மக்களைக் காக்க 14 மாவட்ட ஆட்சியர்களுடன்முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டு அறிவுறுத்தல்களை வழங்கியிருக்கிறேன்.**

**16 SDRF படைகளும் 12 NDRF படைகளும் கடுமையான மழைப்பொழிவு ஏற்படக்கூடிய மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன.**

**அனைத்துத் துறைகளும் முறையான திட்டமிடுதலோடு ஒருங்கிணைந்து செயல்படுவதை மாவட்ட ஆட்சியர்கள் உறுதிசெய்திட வேண்டும்! பொதுமக்கள் வானிலை ஆய்வு மையத்தின் எச்சரிக்கையினைப் பின்பற்றி, அவசியமின்றி வெளியில் வருவதைத் தவிர்த்து, பாதுகாப்பான இடங்களில் இருக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்




தமிழ்நாடு சீர்மரபினர் நல வாரியத்தின் நான்காவது கூட்டம் தேனாம்பேட்டை டி.எம்.எஸ். வளாகத்தில் உள்ள வாரிய அலுவலக கூட்ட அரங்கில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வி.மெய்யநாதன் தலைமையில் வாரியத் துணைத் தலைவர் இராசா அருண்மொழி முன்னிலையில் நடைபெற்றது, கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை செயலாளர் சரவணன்வேல் ராஜ் ஐ.ஏ.எஸ். வாரியத்தின் உறுப்பினர் செயலர் திருமதி கலையரசி ஐ.ஏ.எஸ்., அரசு சாரா உறுப்பினர்கள், அரசு சார்பு உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் தமிழ்நாட்டு மக்களின் பிரதிநிதிகளிடம்

# ஒன்றிய பா.ஜ.க. அரசு பதில் சொல்லியே ஆக வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!



சென்னை, நவ.30-

"வருகின்ற நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் தமிழ்நாட்டு மக்களின் பிரதிநிதிகளிடம் ஒன்றிய பா.ஜ.க. அரசு பதில் சொல்லியே ஆக வேண்டும்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் கூறியுள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:

**மிகப்பெரிய ஜனநாயக நாடு என்று பெருமையாகச் சொல்லிக்கொண்டே, தமிழ்நாட்டு மக்களின் குரலை ஒன்றிய பா.ஜ.க. அரசு புறக்கணிப்பது சரியா?**

**தமிழ்நாட்டின் கோரிக்கைகளை-தேவைகளைக் கடிதங்களாக, நேரில் மனுக்களாக, சட்டமன்றத் தீர்மானங்களாக எடுத்துச் சொல்லியும் காதில் வாங்காமல் இருப்பது நியாயமல்ல!**

**அதிகமான வரி வருவாயைத் தரும் மாநிலமான தமிழ்நாட்டுக்கு வஞ்சனை செய்வதை மனச்சாட்சியுள்ள யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். உங்கள் வஞ்சனைகளைக் கடந்துதான் நாட்டிலேயே அதிகமான 11.19% பொருளாதார வளர்ச்சியை அடைந்திருக்கிறோம். குட்ட குட்ட குனிய மாட்டோம்; நிமிர்ந்து நடைபோடுவோம்!**

**வருகின்ற நாடாளுமன்றக் கூட்டத்தொடரில், தமிழ்நாட்டு மக்களின் பிரதிநிதிகளிடம் ஒன்றிய பா.ஜ.க. அரசு பதில் சொல்லியே ஆகவேண்டும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

தமிழ்நாடு – சென்னை மாநகராட்சி

# மழையை எதிர்கொள்ள தயாராக உள்ளது!

## நெல்லையில் அமைச்சர் கே.என்.நேரு பேட்டி!



நெல்லை, நவ.30-

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை வட்டம் குலவணிகர் கிராமம் பொருநை அருங்காட்சியக பணிகளை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு, மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார், நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் மாநகராட்சி மேயர் ராமகிருஷ்ணன், மாநகராட்சி ஆணையாளர் மோனிகா ராணா, துணை மேயர் கே. ஆர்.ராஜு ஆகியோர் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு பணி மேற்கொண்டார்.

பின்னர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு தெரிவித்ததாவது.

தமிழகத்தின் தொன்மையான வரலாற்றினை உலகறிய செய்யும் பொருட்டு கொற்கை, ஆதிச்சநல்லூர், சிவகளை ஆகிய இடங்களில் கிடைத்த தொல்பொருட்களை காட்சிப்படுத்திட திருநெல்வேலி மாவட்டம் குலவணி கர்புரம் கிராமத்தில் அருங்காட்சியகம் அமைக்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 18.05.2023 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.

பொதுப்பணித்துறை சார்பில் ரூ.56.60 கோடி மதிப்பீட்டில் 13 ஏக்கர் நிலத்தில் 54 ஆயிரம் சதுர அடியில் ஆதிச்சநல்லூர் தொகுதி A மற்றும் B கட்டடம் 16,486 சதுர அடியில் தரைதளம் மற்றும் முதல் தளமும், சிவகளை கட்டடம் 8,991 சதுர அடியில் தரைதளம், முதல் தளமும், கொற்கை தொகுதி A மற்றும் B கட்டடம் 17,429 சதுர அடி தரைதளம், முதல் தளத்துடன் கட்டுமானப் பணிகள் முடிவுற்றுள்ளன.

மேலும் ஒவ்வொரு கட்டடத்திற்கு இணைப்பு சாலை அமைக்கவும், அழகு நிறைந்த குளமும், குளத்தின் மீது பாலம் அமைக்கவும், சுற்றுச்சுவர், பூங்காக்கள், வண்ண விளக்குகள், நீறுற்று, சுற்றுச்சூழல் திறந்த வெளி திரையரங்கு அமைப்புகள், திறந்தவெளி கூட்டரங்கம் போன்ற பல்வேறு பணிகள் மக்களை கவரும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வயதானவர்கள் சென்று பார்க்கும் வகையில் பேட்டரியால் இயங்கும் வாகன வசதி செய்துதரப்படவுள்ளது. தொல்லியல் துறையின் மூலம் ரூ.6 கோடி மதிப்பில் காட்சிப்படுத்தும் கூடங்கள் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, காட்சிப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு பொருநை அருங்காட்சியகம் பொது மக்களின் பார்வைக்காக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் வரும் 20122025 அன்று திறந்து வைக்கவுள்ளார்கள்.

மேலும் முதலமைச்சர் அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் சுமார் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசு மருத்துவக் கல்லூரி கூடுதல் கட்டிடத்தையும், முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தும், புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டவும் உள்ளார்கள்.

திருநெல்வேலி மாவட்டத்தில் பருவமழை சந்திப்பதற்கு முன்னேற்பாடு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. திடியூர் தமிழாக்குறிச்சி அணையில் ஏற்பட்டுள்ள கசிவு பொறியாளர்கள் மூலம் ஆய்வு செய்து நிரந்தரமாக அடைப்பதற்கும், மேலும் இதுபோன்ற கசிவுகள் ஏற்படாத வண்ணம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். திருநெல்வேலி மாநகராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடை விரிவுப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது. இதனால் சாலைகள் பழுதடைந்துள்ளது. இப்பணிகள் முடிவடைந்தவுடன் மேடு, பள்ளம் இல்லாமல் சரிசெய்யப்பட்டு சாலைகள் அமைக்கப்படும்.

தொடர்ந்து அமைச்சர் கே.என்.நேரு செய்தியாளர்களிடம் பேட்டியின் போது தெரிவித்ததாவது.

மாவட்டத்தில் நடந்து வரும் 831 கிராமங்களுக்கு தண்ணீர் வழங்கும் தாமிரபரணி கூட்டுக்குடிநீர் திட்டம் பணிகள் முடிவடைய இன்னும் 15 முதல் 20 நாட்களாகும் என்பதால், பணிகள் முழுமையாக முடித்து விட்டால் அந்தப் பணிகளை தொடங்கி வைக்க வாய்ப்பு உள்ளது.

தாமிரபரணியில் கழிவு நீர் கலப்பதை தடுப்பது குறித்து சென்னை மற்றும் பிற மாநகராட்சிகளை போலவே நெல்லையிலும் கழிவுநீரை சுத்திகரித்து மறுசுழற்சி செய்யும் திட்டங்கள் செயல்படுத்தப்படும். தற்போதுள்ள 50 எம்.எல்.டி சுத்திகரிப்பு நிலையத்தை மேலும் விரிவு படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எந்த ஒரு நீர் நிலையிலும் கழிவுநீர் கலக்காத வாறு தடுக்க விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது.

கோவையில் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் பெயரில், திருச்சியில் காமராஜர் பெயரில் நூலகம் வருகிறது. நெல்லையில் காயிதே மில்லத் பெயரில் நூலகம் அமைகிறது. இந்த பணிகள் துரிதப்படுத்தப்பட்டு விரைவில் முதலமைச்சர் அவர்களால் திறக்கப்படும்.

சென்னை மாநகராட்சி மழையை எதிர்கொள்ள முழுமையாக தயாராக உள்ளது. மழை நீரை வெளியேற்ற 100 முதல் 150 டிராக்டர் மோட்டார்கள் மற்றும் உயர்திறன் கொண்ட மோட்டார்கள் தயார் நிலையில் உள்ளன. சுரங்கப் பாதைகளில் தேங்கும் நீரை உடனுக்குடன் அகற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மழைநீர் வடிகால் பணிகள் பெரும்பாலான இடங்களில் முடிந்து விட்டன. பல ஆண்டுகளாக தூர் வாரப்படாத விருகம்பாக்கம் கால்வாய், ரெட்டேரி உள்ளிட்ட முக்கிய கால்வாய்கள் தூர்வாரப் பட்டுள்ளன. 15 முதல் 20 சென்டிமீட்டர் மழை பெய்தாலும் நீர் 4 முதல் 5 மணி நேரத்தில் வடிந்துவிடும் வகையில் கட்டமைப்பு உள்ளது. வானிலை ஆய்வு மையத்தின் எச்சரிக்கையை கருத்தில் கொண்டு அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை களும் எடுக்கப்பட்டுள்ளன.

நெல்லையில் உள்ள வெள்ளநீர் கால்வாயில் உடைப்பு ஏற்பட்டுள்ளது இதனை அடைப்பதற்கு வல்லுனர் குழு வந்துள்ளனர் அதனை உடனடியாக சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார். நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர் தர்மன், பொதுக் குழு உறுப்பினர் பரமசிவ அய்யப்பன், வள்ளியூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் அலெக்ஸ் அப்பாவு, தச்சை பகுதி பொறுப்பாளர் சுப்பிரமணியன், மானூர் ஒன்றிய செயலாளர் அருள் மணி, மாவட்ட வருவாய் அலுவலர் மு.துரை, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சரவணன், கண்காணிப்பு பொறியாளர் ஸ்ரீதரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பேச்சி பாண்டியன் செயற்பொறியாளர் ஜோசப் ரன்சட் பெரஸ், ஸ்ரீராம், தொல்லியல் துறை இணை இயக்குநர் யதீஷ்குமார் (தொழில்நுட்பம்) மற்றும் பொதுப்பணித் துறை அலுவலர்கள், கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.



இராணிப்பேட்டைமாவட்டம் மாற்றுத்திறனாளி நியமன உறுப்பினர்கள் தேர்வானதையடுத்து கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் மாவட்ட செயலாளர் ஆர்.காந்தியை மரியாதை நிமித்தமாக சந்தித்து நியமன படிவத்தை காண்பித்து வாழ்த்துப் பெற்றார்கள். உடன் மாவட்ட அவைத் தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் மற்றும் ஒன்றிய செயலாளர்கள் ஒன்றிய குழு தலைவர்கள் துணை தலைவர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இராணிப்பேட்டைமாவட்டம் மாற்றுத்திறனாளி நியமன உறுப்பினர்கள் தேர்வானதையடுத்து கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் மாவட்ட செயலாளர் ஆர்.காந்தியை மரியாதை நிமித்தமாக சந்தித்து நியமன படிவத்தை காண்பித்து வாழ்த்துப் பெற்றார்கள். உடன் மாவட்ட அவைத் தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் மற்றும் ஒன்றிய செயலாளர்கள் ஒன்றிய குழு தலைவர்கள் துணை தலைவர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.